Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (9-3-66) இதழ் 30

விசுவாவசு மாசி 26 ஜுல்க: பிறை 15 புதன்கிழமை

## 'உணவுப் பிரச்னையே உலகில் முக்கிய பிரச்னை'

வாஷிங்டன், மார்ச் 28

''உலகில்ஏற்பட்டுவரும் உணவுநெருக்கடி நிலைமைக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் தீவிர நடவடிக்கை இன்னும் சில வருடங்களில் பல நாடுகளில் அரசியல், பொருளாதார சமூகக் கொந்தளிப்புகளை ஏற்படவிடாது தடுத்துவிடும்'' என அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்ரஸ்க் தெரிவித்துள்ளார்.

செனட்சபையின் விவசாயக்கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

'உலகில் ஜனத்தொகை மிகவும் அதிகரித்து வருவதால் உணவுப் பிரச்னை மிகமுக்கிய பிரச்னையாகிக் கொண்டு வருகிறது. இதனைத் தீர்த்து வைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது' என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. ரஸ்க் மேலும்

(6ம் பக்கம் பார்க்க)

# அவநம்பிக்கைப்பிரேரணை நிறைவேறியது

## அரசாங்கம் - எதிர்க்கட்சி முட்டுக்கட்டை

### அரசியல் அமைப்பு பிரேரணை கொண்டுவருவதில் தகராறு

கொழும்பு, செவ்வாய்

இலங்கைக்கான புதிய அரசியல் திட்டமொன்றைக் கோரும் கூட்டுப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையே முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இன்று பார்லிமெண்ட் கட்டடத்தில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் மகாநாட்டில் அரசாங்கக் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் புதிய அரசியல்திட்டமொன்றைக் கோரும் கூட்டுப்பிரேரணையைக் கொண்டு வருவது குறித்துவிவாதித்தனர். ஆனால் முடிவெதுவுமில்லாமலே கூட்டம் முடிவடைந்தது.

### எதிர்க்கட்சியினர் கோரிக்கை

தாங்கள்ஏற்கெனவே முன்னறிவித்தல் கொடுத்துள்ளது போல, புதிய அரசியல் திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென்றும், தங்களது பிரேரணையை அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இருசாராருக்குமிடையே சர்ச்சை ஆரம்பமானது.

அரசாங்கக் கட்சியினர், தாங்கள் கொண்டுவரவிருக்கும் நகல் பிரேரணையொன்றை விவாதத்தில் சமர்ப்பித்து, தாங்கள் கோரும் சீர்திருத்தங்களை தமதுபிரேரணையை

(6-ம் பக்கம் பார்க்க)

## 9 பேர் ஆதரித்தும் 7 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மேயர் திரு. எஸ. நாகராசா மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை சுமார் 6 மணிநேரம் நடைபெற்ற சூடான விவாதத்தின் பின்னர் நிறைவேறியது. பிரேரணையை ஆதரித்து 9 அங்கத்தவர்களும், எதிர்த்து 7 அங்கத்தவர்களும் வாக்களித்தார்கள். ஒரு அங்கத்தவர் சபைக்கு வரவில்லை வாக்கெடுப்பு நேற்றிரவு 9-15-க்கு நடைபெற்றது

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ கூட்டம் நேற்று பிற்பகல் 3-45 மணிக்கு கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா தலைமையில் ஆரம்பமானது.

### பொலிஸ பாதுகாப்பு

நகரசபை மண்டபத்தின் வெளியில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். அநுமதி சீட்டு உள்ளவர்களே 'கலரி'யில் அனுமதிக்கப்பட்டனர். நகர மண்டபத்திற்கு வெளியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பிருந்தது. விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயம் மின்சார தடை ஏற்படுமோவென்ற அச்சத்தின் காரணமாக 'இருபெட்ரோல் மாக்ஸ்' விளக்குகள் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன. நேற்று பிற்பகல் 3 மணி தொடக்கம் மக்கள் நகரமண்டபத்தில் கூடத் தொடங்கினர்.

### ஆதரித்தவர்கள்

நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரித்தவர்கள்: திருவாளர்கள் ஏ. ஜி. ராஜசூரியர், எம். எஸ். பேரின்பநாயகம், ஏ. ரி. துரையப்பா, தம்பு கந்தையா, ஏ.

(6-ம் பக்கம் பார்க்க)

## சதிமுயற்சி விசாரணை தொடர்கிறது

கொழும்பு, செவ்

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்தார்களெனச் சந்தேகப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறியப்படுகிறது.

இச்சதியில் சம்பந்தப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் மேலும் நான்கு இராணுவத்தினர் இப்போது இரகசியப் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

விசாரணை செய்யப்பட்டு வருபவர்களில் ஒருவர் இராணுவ உத்தியோகத்தர். மற்றவர்கள் இராணுவ சிப்பாய்கள்.

### 12 பேர் கைது

கொழும்பு, செவ்.

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததுடன் அமைச்சர்கள் சிலரைக் கொலை செய்யவும் கடந்த மாதம் 17-ம் திகதி திட்டமிடப்பட்டிருந்தது சம்பந்தமாக இரகசியப் பொலிஸாரினல் விசாரணை செய்யப்பட்டுவரும் இராணுவத்தினரில் ஒருவர் இன்று கைது செய்யப்பட்டார்.

குறிப்பிட்ட இராணுவ வீரர் இன்று கைது செய்யப்பட்டு மகஸீன் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்.

இச்சதி சம்பந்தமாக இதுவரை மொத்தம் 12 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சதி விபரங்கள்

## மந்திரிசபை ஆராய்ந்தபின் பார்லிமெண்டில் அறிவிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

பெப்ரவரி 17-ந் திகதி புரட்சி நடத்தத் திட்டமிட்டது பற்றி நாளை (புதன்கிழமை) மந்திரிசபை விவாதித்த பின்னர், இதுபற்றி ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதிப்பது பற்றி ஒரு முடிவு செய்யலாமென்று மந்திரிசபையின் பதில் தலைவரும், ராஜாங்க மந்திரியுமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

### சதித்திட்ட விபரம் வெளியாகும்

நாளை (புதன்கிழமை) மந்திரிசபை கூடும்பொழுது சதித்திட்ட முயற்சி பற்றியும் அதைத் தொடர்ந்து நடைபெறும் விசாரணைகள் பற்றியும் ஆராயுமென்றும் அதன்பின் சதித்திட்டம் பற்றிய விபரங்கள் ஜனப்பிரதிநிதிகள் சபையில் வெளியிடப்படுமென்றும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று காலை நடைபெற்ற அரசாங்கக் கட்சிக்கூட்டத்தில் தெரிவித்தார்.

மீண்டும் ஜனப்பிரதிநிதிகள் சபைகூடும்பொழுது சதித்திட்டம்பற்றிய தகவல்களை திரு ஜயவர்த்தன வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் சதிமுயற்சியில் ஈடுபட்டவர்கள்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென எம். பி.க்கள் பலர் திரு. ஜயவர்த்தனவைக் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது. சதிவிசாரணைகளை நடத்தும் திறமைக்குப் பலர் திரு. ஜயவர்த்தனவைப் பாராட்டினர். இராணுவத்திலிருந்து சதிகாரர்களை நீக்கி அதைப் புனரமைப்புச் செய்யவேண்டுமெனப் பலர் கேட்டுக்கொண்டனர்.

கல்வி இலாகாவிலுள் அரசாங்க விரோதிகளை அப்புறப்படுத்தி அதைச் சீர்திருத்தவேண்டுமென கிளிநொச்சி எம். பி. கேட்டுக் கொண்டார். திறமையாக நடைபெருத இலாகாக்களை சீர்திருத்தவேண்டுமென திரு. இரத்தினம் கேட்டுக் கொண்டதுடன் எம். பி.க்கள் எழுதும் கடிதங்களுக்கு சில இலாகாத் தலைவர்கள் பதில்எழுதுவதில்லையென்றும் அவர் புகார்செய்தார். எம். பி.க்கள் எழுதினலும் பொதுமக்கள் ஒரு வாரத்துக்குள் பதில் கிடைக்கும்படி செய்வதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக திரு. ஜயவர்த்தன உறுதியளித்தார்.

## தற்காலிக சேவையாளரை நிரந்தரமாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க பகுதிகளிலும், அரசாங்க கூட்டு ஸ்தாபனங்களிலும் வேலைபார்க்கும் அமைய அல்லது தற்காலிக லிகிதர்களை (தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்) நிரந்தரமாக்க திறைசேரி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவர்கள் இப்பொழுது மாதச் சம்பளமின்றி நாட் சம்பளத்தில் வேலை பார்க்கின்றனர்.

அரசாங்க பகுதிகளுக்கும் அரசாங்க கூட்டு ஸ்தாபனங்களுக்கும் இது சம்பந்தமாக திறைசேரி அனுப்பிய சுற்றறிக்கையொன்றில் அரசாங்கம் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்வரை, அமைய அல்லது தற்காலிக லிகிதர்களையோ அல்லது தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளரையோ சேவையிலிருந்து நீக்கவேண்டாமென்று சகல அரசாங்க இலாகாக்களையும் அரசாங்க கூட்டுஸ்தாபனங்களையும் கேட்டுள்ளது.

தற்பொழுது வேலைபார்க்கும் ஒரு சேவையாளரை வேலை நீக்கம் செய்[illegible]ண்டு

(6-ம் பக்கம் பார்[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நிரந்தர சமாதானத்தை அடையமுடியும் என்பதில் நம்பிக்கைகொள்ளாவிட்டால், அது மனித இயல்பின் தெய்வீகத்தன்மையில் அவநம்பிக்கை கொள்வதாகும். —மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box ... JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: ...

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி 26 வ (9-3-66)


## கென்னடி சகோதரர் யோசனை

வியட்னாமுக்கு மேலும் உதவியளிப்பதற்காக 41 கோடி 50 லட்சம் டாலர் ஒதுக்கவேண்டுமென ஜனாதிபதி ஜோன்சன் விடுத்தகோரிக்கையை அமெரிக்க செனட் ஏற்றுக்கொண்டது. அதாவது வியட்னாம் சம்பந்தமாக ஜோன்சனின் கொள்கைக்கு செனட் அங்கீகாரமளித்துள்ளது. இது எதிர்பாராத விஷயமல்ல. ஆனால் செனட் சபை விவாதத்தில் பல செனட்டர்களும் தெரிவித்த கருத்துக்களையும் ஜோன்சன் சிந்தையிலிருத்த வேண்டும்.

வியட்னாமில் இப்பொழுது கடும் சண்டை நடைபெறுகிறது. வடக்கு வியட்னாம் படைகளுடன் அமெரிக்க மாலுமித் துருப்புக்கள் நேரடியாகவே சண்டையிலிறங்கியிருக்கின்றன. இனி இச்சண்டை எந்த அளவுக்கு விரிவடையுமென்பதைச் சொல்லமுடியாது. சீனாவும் அமெரிக்காவும் நேரடியாகப் போரில் இறங்கநேரிடலாம் என்று செனட்டர் வுல்பிரைட் தெரிவித்த கருத்து விரைவிலேயே செயல்படவும் கூடும். இரு அரசுகளின் பலப்பரீட்சையில் ஒரு பாவமுமறியாத அப்பாவி மக்கள் அநியாயமாகப் பலியாவதைவிட சீனாவும் அமெரிக்காவும் நேரடியாகத் தங்கள் நாடுகளுக்குள் சண்டையிட்டுக் கொள்வது நல்லதே. அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையில் நேரடியான சண்டை ஏற்பட்டால் அமெரிக்கா அல்லது சீனாமட்டுமல்ல, அகில உலகுமே அழியக்கூடிய ஆபத்து ஏற்படலாம். இந்தப் படுநாசத்தை யாரும் விரும்பமாட்டார்கள்.

இந்த பலப்பரீட்சையில் இதுவரை ஆயிரக்கணக்கான அப்பாவி வியட்னாம் மக்கள் உயிரைப் பலிகொடுத்துள்ளனர். செனட்சபை அங்கீகாரமளித்துள்ள நாற்பத்தொன்றரைக் கோடி டாலரும் இன்னும் பல வியட்னாமியரின் உயிரைப்பலிகொள்ளவே உபயோகப்படலாம். வியட்னாம் பிரச்னைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கு வடவியட்னாம் இணங்கவில்லை என அமெரிக்காவும் அமெரிக்காவுக்கு சமாதானத்தில் உண்மையான நாட்டமில்லை என வடவியட்னாமும் ஒருவர் மீது ஒருவர் குறைகூறிக் கொண்டிருக்கின்றனர். குறைகூறிக் கொண்டும் 'வசை'பாடிக் கொண்டுமிருப்பதால் சண்டை நின்றுவிடாது. சமாதானம் ஏற்பட்டுவிடாது. வியட்னாமில் அமெரிக்கா தனக்குள்ள க[illegible]மையை நிறைவேற்றி[illegible]தீரவேண்டுமென்பது[illegible]ம் கௌரவப் பிரச்னையாக இருக்கக் கூடாது. உலக சமாதானத்தை ஏற்படுத்துவதில் அமெரிக்காவுக்கும் கடமை உண்டு. வியட்னாமில் தங்கள் மக்களை அனுப்பி பலிகொடுப்பதை அமெரிக்க மக்களே ஒப்பவில்லை.

எனவே தான் உண்மை நிலையை உணர்ந்த கென்னடி சகோதரர்கள் வியட்னாம் பிரச்னைக்கு சமாதானத் தீர்வுகாண்பதற்கு, உபயோகமான யோசனையைத் துணிந்து வெளியிட்டிருக்கின்றனர். கென்னடி குடும்பம் மீண்டும் வெள்ளை மாளிகைக்குள் நுழையும் நோக்கத்துடன் இந்த யோசனைகளை வெளியிட்டிருப்பதாக ஜோன்சன் ஆதரவாளர்களும் கோல்ட் வார்ட்டர்களும் கருதலாம் அல்லது அஞ்சலாம். ஆனால் உலக சமாதானத்தையும் அப்பாவி வியட்னாம் மக்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றும் உண்மையிலேயே விரும்பும் மக்கள், கென்னடி சகோதரர்களின் யோசனையை நிச்சயம் வரவேற்பர்.

வியட்னாம் பிரச்னையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் மூவர். வடவியட்னாம், தென் வியட்னாம், வியட்காங்கியர் ஆகியோரே அவர்கள். இம்மூவரும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதன் மூலமே இப் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும். தாஷ்கண்டில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தது இதற்கு உதாரணம். ''வியட்னாம் சண்டைக்கு முடிவு காண்பதற்கு, உடனடியாக வியட்காங்கியருடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும்'' என்று செனட்டர் ரொபர்ட் கென்னடியும், செனட்டர் எட்வர்ட் கென்னடியும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த யோசனை பயனுள்ளது. வியட்காங்கியரை அங்கீகரிக்க மறுப்பதன் மூலம் அமெரிக்கா, வியட்னாம் பிரச்னைக்கு தீர்வுகண்டுவிடமுடியாது. பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். பிரச்னையில் நேரடியாகச் சம்பந்தப்படாதவர்கள் இதற்கு உதவி புரியாவிட்டாலும் இடையூறுவது செய்யாமலிருந்தால் போதும். வியட்னாம் பிரச்னைக்கு சமாதானத் தீர்வுகாண முயற்சிசெய்யும் ஜப்பான் பிரதமர் போன்றவர்கள், கென்னடி சகோதரர்களின் யோசனையையும் உரிய இடங்களில் வலியுறுத்தலாம். இந்த யோசனையை அமெரிக்க ஜனாதிபதி பதவியுடன் இணைத்து சந்தேகக் கண்கொண்டு பார்த்தால், அதனால் கென்னடி சகோதரர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடாது; ஆசியாவுக்கும் முடிவில் அமெரிக்காவுக்குமே பெருநஷ்டமேற்படுத்தலாம்.

## பதினான்கு வயது பால்ய மேதை சேனகா சேனநாயகா

ஏழு நாடுகளில் தனது ஓவியச் சித்திரங்களைக் காண்பித்து பல கலை விமர்சகர்களின் பாராட்டுதலையும் பெற்றுள்ள பதினான்குவயது பால்யமேதை சேனகா சேனநாயகாவை இந்தியாவும் கௌரவிக்கப்போகிறது. அவருடைய சித்திரங்கள் இந்திய கலாச்சார உறவு சங்கத்தின் ஆதரவிலே இம்மாதம் 27-ம் திகதி முதல் 31-ந் திகதி வரை சென்னையில் காட்சிக்கு வைக்கப்படும். இலங்கை கலைஞர் ஒருவன் இந்தியாவில் கௌரவிக்கப்படுவதையிட்டு நாமெல்லோரும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

ஆறுவது வயதிலேயே சித்திரம் வரையத்தொடங்கிய சேனகா தன்னிடத்தில் இயற்கையாகவே ஓவியக் கலையார்வம் இருப்பதை அறிந்துகொண்டு பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பிய நேரங்களில் கையில் அகப்பட்ட தாள்களிலெல்லாம் சித்திரங்களை வரைந்து வந்தான். 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்றவாறு சேனகாவின் கலை நாளுக்கு நாள் வளர்ந்துவந்தது. இலங்கை கலைக்கழகத்தின் தலைவர் அவனுடைய ஆற்றலைக் கண்டு வியந்து ஒரு நாள் வர்ணப்பூச்சுகளை வாங்கிப் பரிசளித்தார். அதற்குப்பின் அவனுடைய ஓவியத்திறன் வெளியுலகுக்கும் தெரியவந்தது.

இன்று அவனுடைய சித்திரங்கள் அமெரிக்காவின் வெண்மாளிகையிலும், பெர்லின் நூதனசாலையிலும் இன்னும் பல இடங்களிலும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. நியூயோர்க் நகரத்திலுள்ள ஐக்கியநாடுகள் சபை கட்டடத்துக்கு ஒரு படம் வரைந்து தரும்படி அவனுக்கு அழைப்பு வந்திருக்கிறது. விரைவில் அந்த உலகமகாசபையிலும் அவனுடைய சித்திரம்ஒன்று தொங்கப்போகிறது.

இவ்வருடமுடிவில் ஜீ. ஸி. ஈ. பரீட்சைக்கு எழுதவிருக்கும் இந்தச் சிறுவன் இதுவரை ஆயிரக்கணக்கான படங்களை வரைந்திருக்கிறான். சிறுவனுடைய படங்களைப்பார்த்து மூக்கில் விரல் வைத்து வியந்த கலைரஸிகர்கள் 'இந்தச்சிறு குழந்தைக்கு எவ்வாறு இந்த ஆற்றல் கிடைத்தது!' என்று ஆச்சரியப்படுகிறார்கள். 'விட்ட குறை தொட்ட குறை' என்றுசொல்வார்களே, அதுபோல ஏதோ ஒரு வித முற்பிறப்புத் தொடர்பினாலேயே சேனகா இன்று பால்ய மேதையாகக் கருதப்படுகிறான். ஐரோப்பாவில் அவன் சுற்றுப்பிரயாணம் செய்து தனது சித்திரங்களை காண்பித்தபோது ஐரோப்பிய ஓவியர்களே அவனது கைத்திறனைப் பாராட்டி வியந்தனர். கோரியேவ் என்ற சோவியத் கலைஞர் 'மீன்பிடிகாரர்' என்ற தலைப்பில் சேனகா வரைந்த ஒரு படத்தைப் பார்த்துவிட்டு 'அது ஓர் அசாதாரணமான சித்திரம்' என்று புகழ்ந்தார். அதில் வழக்கமாக ஒருவர் எதிர்பார்க்கும் வலைகளையோ, படகுகளையோ காணவில்லை. ஓங்கிச் சுழன்றுவரும் கடலலைகள் மனிதனை விழுங்க வருவதையும் மனிதன் பஞ்சபூதங்களுடன் நடத்தும் போராட்டத்தையும் அது சித்தரிக்கிறது என்று கோரியேவ் கூறினார்.

சேனகாவுக்கு இந்தபுகழ்ச்சிகளைப் பற்றி அக்கறையே கிடையாது. அவன் சாதாரண சிறுவர்களைப்போல பள்ளிக்கூடம் போய்வருகிறான். கிரிக்கட் விளையாடுகிறான். [illegible] ஈ. படிக்கும் சேனகா பிற்காலத்தில் ஒரு டாக்டராக வேலை செய்யவேண்டுமென்ற விருப்பம் இருக்கிறது. 'ஓவியக்கலையைப் பொறுத்தவரையில் நான்விரும்பியதையே வரைகிறேன். மற்றப் பிரபல ஓவியர்களைப் பின்பற்ற நான் விரும்பவில்லை' என்கிறார் சேனகா.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## சிவபூசை மடம்

திருக்கேதீசுவர ஆலயத்தில் வடக்கு வீதியில் திருவருள் துணையாலும் பெரியோர்கள் உதவியாலும் சிவபூசைமடம் அமைக்கப்பட்டு முடிவடையும் அளவில் இருக்கிறது. இப்புனித பணியை நிறைவேற்றுவதற்குச் சைவப்பாடசாலை ஆசிரியர்களும் சைவ அன்பர்களும் ரூபா 6700/- உதவினார்கள். இது 23-8-65 வரை உள்ள கணக்காகும். இப்பணம் முழுவதும் சேர். கந்தையா வைத்தியநாதனிடம் கொடுக்கப்பட்டது. அப்பெரியார் பக்கத்திற்கு மூன்றாக ஆறு அறைகளும், நடுவே ஒரு மண்டபமுமாகக் கட்டி எழுப்பி வளைமட்டத்தில் வேலையை வைத்துச் சென்றுவிட்டார்கள். மேலும் உள்ள குறைவேலையை முடிப்பதற்கு பணம்தேவை. சிவநேயச் செல்வர்கள் உதவவேண்டும்.

த. பொன்னம்பலம்,
வலி-வடக்கு
திருக்கேதீஸ்வர
அடியார்சபை தனாதிகாரி,
சங்கானை.

---

## கூட்டுறவு வங்கி மீண்டும் திறக்கப்பட்டது

கல்முனை, செவ்வாய்

மட்டக்களப்பு மாகாண கூட்டுறவு வங்கியும், அதன் கல்முனைக் கிளையும் மீண்டும் இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 17-ந்திகதி தொடக்கம் மட்டக்களப்பு மாகாண கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்டு அதன் நிர்வாகப் பொறுப்பை மக்கள் வங்கியிடம் தான் கையளித்துள்ளதாக விசேஷ கசெற் அறிவித்தல் மூலம் நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்க அறிவித்த கட்டளையை ரத்துச் செய்வதாக தெரியவருகிறது. பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம், கல்குடாப் பிரதிநிதி திரு. கே. டபிள்யு தேவநாயகம் ஆகியோர் மக்கள் வங்கி கூட்டுறவு மாகாண வங்கியை பொறுப்பேற்றதையிட்டு பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவித்திருந்தனர்.

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

அவனுடைய உடலைச் சுற்றிக்கொண்டு நெரித்தது. அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இரண்டு கைகளாலும் பாம்பின் தலையைப் பிடித்து அதன் வாய்க்குக் கீழேயுள்ள மென்மையான பாகத்தில் தன் முழுப்பலத்தையும் கொண்டு இறுக்கிக் கடித்தான். பாம்பு அந்தக் கடியினால் உண்டான நோ தாங்கமுடியாமல் தன்னுடைய பிடியைத் தளர்த்திக் கொண்டு 'தப்பினேன் பிழைத்தேன்' என்று ஓடிப்போய் விட்டது.

மற்றப் பாம்புகளைப்போல தனக்குப் பல்லில்விஷம் இல்லாத குறையை நினைத்து அந்த மலைப்பாம்பு மிகவும் வேதனைப்பட்டிருக்குமல்லவா.

— வழிப்போக்கன்.

## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் சென்றுகொண்டிருந்த பஸ் ஆனைக்கோட்டையில்போய் மக்கர்செய்துவிட்டது. அது மேலே ஓடமாட்டாதென்று டிரைவர் கூறிவிட்டார். அந்தப் பாதையில ஓடும் அடுத்த பஸ் வருவதற்கு மேலும் ஒருமணிநேரம் செல்லும். காசுகளை ஏற்கனவே பிரயாணிகளிடமிருந்து கண்டக்டர் வசூல்செய்துவிட்டார். இந்த நிலையில் அவசரமாக ஓரிடத்துக்குப் போய்ச் சேரவேண்டியவர்கள் கண்டக்டரிடம் மீதிப் பணத்தைத் திருப்பித் தரும்படி கேட்டால் அவர் கொடுக்க வேண்டுமா? கொடுக்கப்படாதா?

இப்பொழுதுள்ள நிலையில் இடைவழியில் நின்றுவிட்டால் முழுப் பிரயாணத்துக்கென்று வசூல்செய்த பணத்தில் எப்பகுதியையாவது கண்டக்டர் திருப்பிக் கொடுக்க மாட்டாரென்றே நினைக்கிறேன். மக்கர்செய்யும் பஸ்வண்டிகளோ யாழ்ப்பாணத்தில் அனந்தம். அநேகமாக ஒவ்வொரு பாதையிலும் ஒருநாளைக்கு ஒரு பஸ்ஸாவது மக்கர் செய்ய மறப்பதில்லை. பஸ் புறப்படுவதற்கு முன்னரே பிரயாணிகளிடமிருந்து பணத்தை வசூல்பண்ணி டிக்கெட் எழுதிக்கொடுக்கும் கண்டக்டர் பஸ் வழியில் நின்றுவிட்டால் மீதிப் பணத்தைத் திருப்பித்தரும்படி கேட்கும் போது வேண்டியதல்லவா முறை? பஸ் மக்கர்செய்தது யாருடைய தவறு? பிரயாணியின் தவறா? இ. போ. ச.வின் தவறா? நிச்சயமாக இ. போ. ச.தானே குற்றவாளி? அப்படியானால் ஏன் இப்படி ஏழைப் பிரயாணிகளிடமிருந்து காசு பறிக்கிறார்கள்?

இப்படி நேரும் சமயங்களில் பிரயாணிகளிடம் காசைத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்று ஒரு சட்டம் இருப்பதாகவே என்னுடைய ஞாபகம். ஆனால் நடைமுறையில் அது பின்பற்றப்படுவதில்லை. டிக்கெட்டுகளை எழுதிவிட்டபடியால் கண்டக்டர் பணத்தை மோசடிசெய்யவும் முடியாது. அது இ. போ. ச.வுக்கே தண்டக்காசாகப் போய்ச் சேருகிறது.

யாழ்ப்பாணத்தில்போதிய பஸ் வண்டிகள் இல்லாதபடியால் வான்கள் நிறைய ஓடுகின்றனவல்லவா? இந்த வான்கள் மக்கர் செய்வதில் இ. போ. ச. பஸ்ஸுகளுக்கு கொஞ்சமேனும் சளைக்காதவை. இந்தசங்கடத்துக்குப் பயந்து அவற்றில் ஏறும் பிரயாணிகள் சிலர் தாங்கள் இறங்கும் இடத்தில் தான் காசு கொடுப்போம் என்று கூறிவிடுகிறார்கள். பஸ் பிரயாணிகளும் இவர்களைப்பின்பற்ற ஆரம்பித்தால் இ. போ. ச.வை நடத்தமுடியாது. இதற்கென்ன வழி? பிரயாணிகள் கோரும் பட்சத்தில் பணத்தை அவர்களிடம் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்ற சட்டம் இருக்குமாகில் அதை ஒவ்வொரு கண்டக்டரும் கட்டாயமாகப் பின்பற்றவேண்டுமென்று இ. போ. ச. மேலதிகாரிகள் கட்டளை போட வேண்டும்.

ஃ ஃ ஃ

பாம்பு மனிதனைக் கடித்தால் அது அவ்வளவு பெரும் புதினமல்ல. மனிதன் பாம்பைக் கடிப்பதென்றால் தான் அது திடுக்கிடும் செய்தியாகும். மொனராகலையிலுள்ள ஒரு குடியானவன் காட்டு வழியாக சந்தைக்குள் போய்க்கொண்டிருந்தான். பெரிய மலைப்பாம்பு ஒன்று அவனை திடீரென்று பற்றி

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீஸோ தீவிரவாதிகள் ஒரேயொரு இடத்தில் நிலைகொண்டுள்ளனர்

## லுங்லேயை நோக்கி இந்திய பாதுகாப்பு படைகள் முன்னேற்றம்

### மலைஜாதியினருக்கு இந்திரா கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 8

மீஸோ மலைப்பகுதியில் இந்திய பாதுகாப்புப்படைகள், கலகக்காரரின் முக்கிய நிலையாக விளங்கிய அய்ஜிலை வசப்படுத்திக்கொண்டு அதற்கு அப்பால், இப்பொழுது கலகக்காரரின் தலமாக விளங்கும் லுங்லேயை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றன. அய்ஜிலில் நிலைமை கட்டுக்கடங்கியிருப்பதுடன் மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களை வழமைபோல் கவனிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

மீஸோ தீவிரவாதிகள் பெருமளவில் பல இடங்களில் நிலைகொண்டிருக்கவில்லையென்றும் மூன்றே மூன்று இடங்களில்தான் அவர்கள் நிலைகொண்டுள்ளன என்றும் இதில் லுங்லே ஒன்று எனவும் இந்திய பாசனமந்திரி திரு. சத்துருதீன் அகமது தெரிவித்துள்ளார். தீவிரவாதிகள் மனத்தளர்ச்சியடைந்திருப்பதாகவும் அவர் சொன்னார். அய்ஜில் பகுதியிலிருந்து சட்டவிரோதிகள் முற்றாக அகற்றப்பட்டுவிட்டதாகவும் சட்டவிரோதிகள் தொடர்ந்து தேடப்பட்டுவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### இந்திரா கருத்து

அஸாமுக்குச்சென்றிருந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு புதுடில்லி திரும்பினார். பாலம் விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்களுடன் அவர் பேசுகையில் மீஸோ மலைப்பகுதியில் வெகுவிரைவில் நிலைமை திருந்திவிடுமென்றும் சட்டவிரோத நடவடிக்கையை ஒழித்துக்கட்டும் வேலைகள் எவ்வளவுகாலத்துக்கு நீடிக்கும் என்பதுபற்றி இப்பொழுது கூறமுடியாதென்றும் சொன்னார்.

அஸ்ஸாம் முதன்மந்திரியைச் சந்தித்துப் பேசியதன் மூலம் சில முக்கியமான தகவல்களைப் பெற முடிந்ததென்றும் பிரதமர் சொன்னார். இந்திய விமானப்படை விமானங்கள் ஆட்களையும் பண்டங்களையும் தான் ஏற்றிச் செல்கின்றன என்று ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் பிரதமர் சொன்னார்.

பிரதமர் இந்திரா மீஸோ மலைஜாதி மக்களுக்கு வானொலி மூலம் நிகழ்த்திய ஓர் உரையில் மீஸோ மக்களின் நலனிலும் முன்னேற்றத்திலும்தாம் பெரும் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். "கெடுமதி கேட்டுவன் முறைச் செயல்களில் ஈடுபடுவதால் அப்பாவி மக்கள்தான் பலியாவார்கள். வன்முறைச் செயல்களினால் நற்பயன் கிடைக்காது ச்செயல்களினால் அபிவிருத்தி வேலைகள் தாமதப்படும்" என்று பிரதமர் கூறினார்.

## இந்தியாவுக்கு ரஷ்ய ஹெலிகொப்டர்கள்

புதுடில்லி, மார்ச் 8

சோவியத் யூனியன் இந்தியாவுக்கு 40 எம். ஐ. ஹெலிகொப்டர்களை வழங்க இருக்கிறது.

சுமார் 45 லட்சம் டாலர் பெறுமதியான இந்த ஹெலிகொப்டர்களை இரு நாடுகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ரஷ்யா கொடுக்க முன்வந்துள்ளது.

இந்த ஹெலிகொப்டர் மணிக்கு 200 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியதென்றும் 1 1/2 தொன் சரக்கை ஏற்றிச் செல்லக்கூடியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் கர்ப்பூர ஆலை

கோவை, மார்ச் 8

கர்ப்பூரம்உற்பத்திசெய்வதற்கான ஆலையொன்று விரைவில் சென்னையில் நிறுவப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவில்களில் பூஜைக்கேற்ற கர்ப்பூர உற்பத்தி செய்வதற்கான ஆலை ஒன்று சென்னையில் அமைக்கப்படவிருப்பதாக ஹிந்து அறநிலையக் கமிஷனர் எம். எஸ். சாரங்கபாணி முதலியார் தெரிவித்துள்ளார்.

இப்போது விற்கப்பட்டு வரும் கர்ப்பூரத்தில் பெரும்பாலானவை போலிச் சரக்கு. அசல் கர்ப்பூரம் கிடைப்பது அரிதாகவிருக்கிறது என்றும் அவர் மேலும் சொன்னார்.

# கல்கத்தாவில் அமைதி; ஒரேயொரு தீவைப்புச்சம்பவம்

## மேற்குவங்கசட்டசபை அங்கத்தவர் கைது; சோஷலிஸ்ட் தலைவர் பாதுகாப்பில்

கல்கத்தா, மார்ச் 8

கல்கத்தாவிலும் சுற்றுப்புறங்களிலும் இப்பொழுது அமைதி நிலவுகிறது. மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கியுள்ளனர். ஜோர்தாப்பூர் பகுதியில் தனியார் வாகனம் ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவம் தவிர வேறு சம்பவங்கள் நிகழவில்லை. வாகனத்தில் இருந்த மூவர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கிருஷ்ண நகரில் நேற்று ஊரடங்கு உத்தரவு சிறிது நேரம் தளர்த்தப்பட்டது.

மேற்கு வங்க பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சமர்குகா உட்பட இடதுசாரித் தலைவர்கள் பன்னிரண்டு பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

குறிப்பான குற்றச்சாட்டுகளின் மீது மேற்கு வங்க சட்டசபை உறுப்பினர் காசிகண்டமொயித்ரா நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

# மாலிக்குச் சென்ற நிக்ருமா கினி திரும்பினர்

லண்டன், மார்ச் 8

கானாவில்ஏற்பட்ட திடீர்ப் புரட்சியினால் பதவியிழந்த கானாவின் அதிபர் டாக்டர் நிக்ருமா மாலியின் தலைநகருக்குச் சென்று மாலி அதிபர் கெயிட்டாவுடன் முக்கியமான அந்தரங்கப் பேச்சு நடத்தியபின் கினி தலைநகருக்குத் திரும்பியிருக்கிறார்.

இதேசமயம் கானாவில் புதிய புரட்சி அரசாங்கம் நிக்ருமா எதிர்ப்பு நடவடிக்கைகள் பலவற்றை எடுத்து வருகிறது. டாக்டர் நிக்ருமா அமைத்த இளைஞர் கழகம் ஒன்றைப் புரட்சி அரசாங்கம் கலைத்துவிட்டது. அக்ராவுக்குச் சமீபத்தில் டாக்டர் நிக்ருமாவின் ஆதரவுடன் இரு ஜெர்மனியர் நடத்தி வந்த கிளைடர் விமானப் பயிற்சிப் பாடசாலையிலிருந்து இரு ஜெர்மனியரையும் அரசாங்கம் அவர்கள் நாட்டுக்கு அனுப்பிவிட்டது.

## நீலகிரியில் அணு ஆராய்ச்சி நிலையம்

சென்னை, மார்ச் 8

நீலகிரியில் அணுசக்தி ஆராய்ச்சி நிலையமொன்று விரைவில் அமைக்கப்பட இருக்கிறது என தமிழ்நாடு கீழ் சட்டசபையில் தொழில் மந்திரி திரு. வெங்கட்ராமன் தெரிவித்தா

## மாகாண கவர்னர் கொலை

மணிலா, மார்ச் 8

பிலிப்பைன்சின் மாகாண கவர்னர் ஒருவரையும் அவரது உதவியாளர் இருவரையும் மறைந்திருந்து தாக்கிய ஒரு கோஷ்டி கொலை செய்துவிட்டது. இத்தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

## மாணவர் கிளர்ச்சி நீடிப்பு

ஜாகர்த்தா, மார்ச் 8

இந்தோனேஷியாவின் மந்திரிசபையில் அதிபர் சுகர்னோ சமீபத்தில் செய்த மாற்றங்களினால் மந்திரிசபையில் கம்யூனிஸ்டுகள் புகுந்துவிட்டார்கள் என ஆட்சேபம் தெரிவித்து கிளர்ச்சி செய்துவரும் மாணவர்கள், அதிபரின் தடையையும் மீறித் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

மாணவர் கிளர்ச்சி பற்றி உயர் மட்ட ஆலோசனை நடத்த அதிபர் சுகர்னோ தமது ஆலோசகர்களை அழைத்திருக்கிறார்.

## குடும்பக் கட்டுப்பாடு

சென்னை, மார்ச் 8

சென்னையில் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் நல்ல பலனை அளித்துவருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இது சென்னையில் பிறப்பு விகிதத்தைப் பெரிதும் குறைத்து வருகிறதென்றும் தற்போது இதற்கு மக்கள் வெகுவாக ஆதரவளித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## விலைப் பரிசீலனை விரிவு

பம்பலப்பிட்டி, செவ்.

கள்ளச் சந்தைக்காரர்கள் பாவனையாளர்களை மோசடி செய்யாது தடுப்பதற்காக விலைபரிசீலனைப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது

இப்பிரிவு, பொருள்களின் விலைகளை நிர்ணயித்து அந்த விலைகளில் பாவனையாளர்கள் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்குமென நம்பப்படுகிறது.

இதற்கான நடவடிக்கையை வர்த்தகமந்திரி டாக்டர் பீரிஸ் மேற்கொண்டுள்ளார்.

## இந்தோனேஷிய புரட்சி விசாரணை

# உண்டுங்கிற்கும் மரணதண்டனை

ஜாகர்த்தா, மார்ச் 8

இந்தோனேஷியாவில் சமீபத்தில் தோல்வியில் முடிவடைந்த புரட்சிச் சதியின் தலைவர் எனக்கருதப்படும் லெப்டினன்ட் கேணல் உண்டுங்கிற்கு, சதிபற்றி விசாரணை செய்யும் விசேஷ நீதிமன்றம் நேற்று மரணதண்டனை விதித்தது.

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோவின் அரண்மனைக் காவல் படையின் தளபதியாகக் கடமையாற்றிய லெப். கேணல் உண்டுங், புரட்சிச்சதிக்குத் தலைமை வகித்தாரென்றும் சதித்திட்டம் நிறைவேறியிருந்தால் உண்டுங் இந்தோனேஷியாவின் அதிபராகப் பதவியேற்றிருப்பாரென்றும் கூறப்பட்டது.

புரட்சிக்குத் தலைமைவகித்தார் என்ற குற்றச்சாட்டை மறுத்த கேணல் உண்டுங், புரட்சிக்குத்திட்டமிட்ட ஜெனரல்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றத் தாம் முயற்சிசெய்ததாக விசாரணையின்போது கூறினார்.

# "உலகப் போரை தடுத்தது நடுநிலைமைக் கொள்கை"

## நேபாளத்தில் யூகோ. பிரதமர்

காட்மாண்டு, மார்ச் 8

'கோஷ்டி சேரா நடுநிலைமை நாடுகள், உலகில் மற்றொரு படுநாசமான போர்மூளாமல் தடுத்துள்ளன' என்று யூகோஸ்லாவிய பிரதமர் திரு. ஸ்டம்போலிக் நேபாளத்தலைநகரான காட்மாண்டுவில் பஞ்சாயத்துச் சபை அளித்த வரவேற்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நடுநிலைமைக் கொள்கை பற்றிவலியுறுத்திய பிரதமர் சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் பின்பற்றுவதன் மூலம் உலகில் அமைதி ஏற்படமுடியுமென்றார்.

சர்வதேச ஒத்துழைப்புப் பற்றி யூகோ பிரதமர் குறிப்பிடுகையில் இதில்தான் தர்மம் எதுவும் கிடையாது என்றும் கொடுப்போரும் பெறுவோரும் பெருமைப்படவேண்டியதென்றும் கூறினார்.

நேபாள மந்திரிசபைத் தலைவருடன் யூகோ பிரதமர் சர்வதேச விவகாரங்கள் பற்றியும் வியட்னாம் நிலைமை பற்றியும் நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## கிளர்ச்சி ஆயுதங்கள்

லியப்போல்ட்வில்லி, மார்ச் 8

காங்கோவின் வடக்குப் பகுதியில் நடந்த கிளர்ச்சியை அடக்கச் சென்ற காங்கோ இராணுவம் இருநூறு கிளர்ச்சிக்காரரையும் சீன ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றியதாகச் செய்திகள் கூறுகின்றன.

## தொழிலதிபர்களுக்கு தெ. பொ. மீ. வேண்டுகோள்

மதுரை, மார்ச் 8

அமெரிக்காவில் உள்ளது போன்று தொழில்துறையினருக்குள்ள பிரச்னைகளைக் கல்வியாளர்கள் ஆராய்ந்து ஆலோசனை கூறுவதுபோல் இருதுறையினரும் பரஸ்பரம் ஒத்துழைத்து நாடு வளம்பெறும் வாய்ப்பு மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்படத் தொழிலதிபர்களும் வர்த்தக சமுதாயத்தினரும் ஒத்துழைக்கவேண்டுமென்று மதுரைப் பல்கலைக்கழக உப அத்யட்சகர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியில் தமக்களிக்கப்பட்டவரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## பதுக்கலுக்கு மரணதண்டனை

சைகோன், மார்ச் 8

தென்வியட்னாமில் பதுக்கல், கொள்ளைலாபம் ஆகியவைகளில் ஈடுபட்ட ஒரு பெரிய வர்த்தகருக்கு விசேஷ நீதிமன்றம் ஒன்று மரணதண்டனை விதித்துள்ளது.

பதுக்கல், கொள்ளைலாபம் ஆகியவைகளில் ஈடுபடுவோர் சுடப்படுவார்கள் என தென்வியட்னாம் பிரதமர் முன்னர் அறிவித்திருந்தார்.

## கோவில் உண்டியல் திருட்டு

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் பறாளை விநாயகர் கோவில், முருகமூர்த்தி கோவில் ஆகிய இரண்டு கோவில் முன்மண்டபத்திலுள்ள உண்டியல்கள் நேற்றிரவு உடைக்கப்பட்டு பணம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இப்பகுதியிலுள்ள கோவில்களில் கள்வரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வீட்டில் ஒருவருமில்லை; அவனைத் தொடாதே!'

# காலஞ்சென்றவர் இப்படிச் சொன்னபோது எதிரி அவரை கத்தியால் வெட்டினர்"

## பெண் கொலை விசாரணையில் மாஜிஸ்திரேட் முன்சாட்சியம்

மாவிட்டபுரம், செவ்.

பத்துப் பிள்ளைகளுக்குத் தாயாரான சுமார் நாற்பது வயதுநிரம்பியவரானபெண் மணி ஒருவர் கத்தியால் வெட்டிக் கொலைசெய்ததாகக் கூறப்படும் ஒரு பரிதாபகரமான சம்பவம் தெல்லிப்பழையிலுள்ள பன்னுலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

பன்னுலையைச் சேர்ந்த திரு. ப. அழகரத்தினம் பொன்னுப்பிள்ளை வெட்டுக் காயத்துடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதைத்தொடர்ந்து மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஜி. எவ். அத்துறுபானு சம்பவம் நடைபெற்ற இடமான பன்னுலையிலும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலும் நேற்று மரண விசாரணை நடத்தினுர்,

### சந்தேக நபர் ஆஜர்

மாஜிஸ்திரேட் காங்கேசன்துறை வைத்தியசாலைப் பிரேத அறையில் காலஞ்சென்றவரின் பிரேதத்தைப் பார்வையிட்டார். இதனைத் தொடர்ந்து வைத்திய அதிகாரியின் அறையில் இம்மரணம் சம்பந்தமாக ஆஸ்பத்திரியில் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான நல்லதம்பி கதிர்காமத்தம்பி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இக்கட்டத்தில் காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ் வி. மூர்த்தி, உதவி இன்ஸ்பெக்டர் இராசநாயகத்தின் உதவியுடன் சந்தேக நபருக்கெதிராக குற்றப் பத்திரிகையைத் தாக்கல்செய்தார், சந்தேக நபரான கதிர்காமத்தம்பி இம்மாதம் 6-ம் திகதி தெல்லிப்பழை பன்னுலையைச்சேர்ந்த பொன்னுப்பிள்ளை என்னும் பெண்மணியை வெட்டிக் கொலை செய்ததாக இலங்கைப் பீனல் கோர்ட் 296-ம் பிரிவின்கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

### வெட்டுக்காயத்துடன் மனைவியைக் கண்டேன்

இதனைத்தொடர்ந்து சாட்சியங்கள் பதியப்பட்டது. காலஞ்சென்றவரின் கணவரான கந்தையா அழகரத்தினம் வயது (48) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நேற்று இரண்டு மணியளவில் தோட்டத்திலிருந்து ஒரு வண்டியில் வெங்காயம் ஏற்றிக்கொண்டு வீடு சென்றேன். அந்நேரத்தில் எனது வீட்டுக்குப் பக்கத்திலிருந்து கூக்குரல் சத்தம் கேட்டது. வியாலாட்சியின் வளவுக்குள் சண்டைநடந்துகொண்டிருந்தது. வண்டியையொழுங்கைக்குள் நிறுத்திவிட்டு வியாலாட்சியின் வளவுக்குட் சென்றேன். அப்பொழுது எனதுமனைவி நிலத்தில் விழுந்துகிடந்தார். அவரது வலதுகையிலிருந்த காயத்தால் இரத்தம் பெருகுவதைக்கண்டேன். அச்சமயம் எதிரியும் அங்குதான் இருந்தார். அவர் மற்றும் சிலருடன் 'இழுபறி'ப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவருடைய கையில் கத்தி ஒன்று இருந்தது. அச்சமயம் வியாலாட்சிப்பிள்ளை ஒரு போத்தலை எதிரியை நோக்கி எறிந்தார். போத்தல் எதிரியின் நெற்றியில் பட்டு அவருக்குக் காயத்தை விளைவித்தது. நான் எதிரியின் கையிலிருந்த கத்தியைப் பறித்தேன். கத்தியைப்பறித்ததும் எதிரி ஓடிவிட்டார். நான் காலஞ்சென்றவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தேன்.

### சிறுவன் சாட்சியம்

சின்னத்தம்பி விஞயகமூர்த்தி (8 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''எமது வீட்டிற்குப்பக்கத்தில் உள்ள பொதுக் கிணற்றில் எமது குடும்பம் எதிரியின்குடும்பம், காலஞ்சென்றவரின் குடும்பம் உட்பட 6 பேருக்குப் பங்குண்டு. எதிரிக்கு நல்லையா என்ற ஒரு தம்பிஉண்டு. நேற்று இரண்டு மணியளவில் நான் கிணற்றடிக்குத் தண்ணீர் அள்ளச்சென்றேன். அச்சமயம் நல்லையா தண்ணீர் அள்ளிக்கொண்டு நின்றுர். அவர் கிணற்றடியை விட்டுச் சென்றபின் நான்வாளியைக் கட்டித் தண்ணீர் அள்ள கிணற்றிற்குள் விட்டேன். அச்சமயம் எதிரி ஒரு கத்தியுடன் அவ்விடம் வந்து வாளியை அறுத்துக் கிணற்றுக்குட்போட்டார். நான் அம்மாவிடம் இவ்விடயத்தைக்கூற, அவர் எதிரியை வளவிற்குள் நின்று பேச, எதிரியும் அம்மாவை ஏசினுர்.

### காலஞ்சென்றவரைக் கத்தியால் வெட்டினுர்!

எதிரி தான் வைத்திருந்த கத்தியைக்கொண்டு அம்மாவை வெட்டுவதற்காக அம்மாவை நோக்கிவந்தார். அம்மா சத்தம் போடவே அயல்வீட்டில் வசிக்கும் பொன்னுப்பிள்ளை அவ்விடம் வயது அம்மாவிற்கும் எதிரிக்கும் இடையில் நின்று இருகைகளையும் நீட்டி அம்மாவை வெட்டவேண்டாம் என்று தடுத்தார். அச்சமயம் எதிரி காலஞ்சென்றவரின் வலதுகையை வெட்டினுர். பின்னர் கத்தியைப் போட்டுவிட்டு ஓட முயன்றுர். அச்சமயம் அழகரத்தினம் எதிரியிடமிருந்த கத்தியை வாங்கினுர். அப்பொழுது எனது தாயார் எதிரியின் நெற்றியில் போத்தலால் அடித்தார். போத்தல் உடையவில்லை.

சின்னத்தம்பி வியாலாட்சிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

நேற்று இரண்டு மணியளவில் நான் எனதுமகன் விநாயகமூர்த்தியை தண்ணீர் அள்ள அனுப்பினேன். அவர் வாளியுடன் கிணற்றடிக்குச் சென்ற சிறிது நேரத்தில் கிணற்றடியில் நின்று கொண்டு வாளி கிணற்றுக்குள் என்று கூறினுர். நான் முற்றத்திற்கு வந்தபொழுது எதிரி என்னை ஏச நானும் ஏசினேன். எதிரி கத்தியைக் கொண்டு என்னை நோக்கி வெட்டவந்தார்,

நான் கூக்குரலிட காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை ஓடிவந்து எனக்கும் எதிரிக்குமிடையில் இரு கைகளையும் பக்கப்பாட்டுக்கு நீட்டிக்கொண்டு ''வீட்டில் ஒருவருமில்லை; அவனை (என்னை வெட்டாதே'' என்று கூறினுர். அச்சமயம் எதிரி காலஞ்சென்றவரின் வலது கையில் ஒருதடவை வெட்டினுர். காலஞ்சென்றவர் மயங்கி நிலத்தில் வீழ்ந்தா. அச்சமயம் அங்கு வந்த அழகரத்தினம் எதிரியின் கையிலிருந்த கத்தியைப் பறித்தார் நான் ஒரு போத்தலால் எதிரியின் நெற்றியில் அடித்தேன். எதிரி ஓடிவிட்டார், அவருடைய நெற்றியில் காயம் இருந்தது. அழகரத்தினமும் மற்றவர்களும் இறந்தவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

விசாரணையை இம்மாதம் 11ந் தேதிக்கு ஒத்திவைத்து அந் தேதிவரை எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனைசெய்தார்.

---

## அதிபருக்கு பிரிவுபசாரம்

உடுப்பிட்டி, செவ்.

திரு. சோமசேகரசுந்தரத்தின் பிரிவு எமது கல்லூரியைப் பொறுத்த வரையில் மிகவும் நஷ்டமாகும். இக் கல்லூரியின் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்காக அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் அளப்பரியன. அவரது சுறுசுறுப்பையும், எடுத்த காரியத்தைச் செவ்வனே முடிக்கும் திறனையும் மாணவர்கள் பழகிக் கொள்ளவேண்டும்'' இவ்வாறு புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் திரு. ஆ. மண்டலேஸ்வரன் மேற்படி கல்லூரியின் அசிரியரும் முன்னுள் விஞ்ஞானக் கழகப் போஷகருமான திரு. வி. சோமசேகரசுந்தரம் யாழ். இந்துக்கல்லூரிக்கு இடமாற்றலாகிச்செல்வதை முன்னிட்டு மேற்படிகல்லூரி விஞ்ஞானக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் கூறினுர்.

செல்வன் கே. பத்மநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

---

## இடமாற்றம்

உடுப்பிட்டி, செவ்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆர். கந்தையா தெல்லிப்பழை யூனியன்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

:::

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய விவசாய ஆசிரியை திருமதி புஷ்பா சிவகுருநாதன் யாழ். இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

உடுப்பிட்டி, செவ்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கா. பாலசுப்பிரமணியம் மூதூர்ப் பகுதிக் கல்வியதிகாரியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

---

## சனசமூக நிலைய கூட்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி சன சமூக நிலைய விசேஷ பொதுக்கூட்டம் கிராம சேவகர் திரு. எஸ். கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. வருகிற சித்திரை வருடப்பிறப்பன்று வழமைபோல் வருடாந்த விளையாட்டுப் போட்டியும், வேறு பல நிகழ்ச்சிகளும் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

---

# மரக்குத்திக்குள் நெரியுண்டு ஐந்துவயதுச் சிறுவன் மரணம்!

பருத்தித்துறை, செவ்.

ஐந்து வயதுச்சிறுவன் ஒருவன் மரக்குத்தியின் கீழ் நெரியுண்டு மரணமான பரிதாபகரமான சம்பவம் கரணவாயிலுள்ள மணலாவடியில் நிகழ்ந்துள்ளது.

பாரமான தென்னங்குத்தியொன்றை மூவர் தூக்கிக் கொண்டு சென்று பின்பக்கமாகப் போட்டபோது, மரக்குத்தியின் கீழ் மேற்படி ஐந்து வயதுச்சிறுவன் அமுக்குண்டு அவலக்குரல் எழுப்பியதாகவும்,பின்னர் சுதேச வைத்தியரிடம் சிறுவனைக் கொண்டுசென்றதாகவும், அங்கு சிறுவன்மரணமடைந்ததாகவும், மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. இ. சு. இராமநாதன் மரணவிசாரணை நடத்தினுர்.

மரக்குத்தியை அந்த மூவரும் தூக்கிச்செல்லும் போது, மரணமான சிறுவன் அவர்கள் பின்னுல் சென்றுனென்றும், மரக்குத்தியை அவ்விடத்தில் போட்ப் போகிறுர்கள் என்று தெரியாத அச்சிறுவன் அவ்விடத்தில் நின்றபோது, அவர்களும் தெரியாமல் பின்புறமாக மரக்குத்தியைப்போட்டார்களென்றும் இதனுல் சிறுவன் மோசமான நிலையில் நெரியுண்டானென்றும் கூறப்படுகிறது.

தற்செயலினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கிராமசேவையாளர் திரு. கனகசபை வேலாயுதம் பிள்ளை, பருத்தித்துறை பொலிஸ்பகுதியைச்சேர்ந்த திரு. ஜி. ஆரியதாசா ஆகியோர் முன்னிலையில் மரண விசாரணை நடத்தப்பட்டது.

---

# "சனசமூக நிலயங்களின் வளர்ச்சிக்கு யாழ். மாநகரசபை உதவவேண்டும்"

## சமாஜக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சன சமூக நிலையங்கள் பொது மக்களுக்கு கல்வித்துறை, கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகிய பல துறைகளிலும் பெரும்உதவி புரிந்துவருவதால் இந்நிலையங்களின் வளர்ச்சிக்கு மாநகரசபை ஊக்கம் தரவேண்டுமென்றும் இந்நிலைய மண்டபங்களுக்கு விநியோகிக்கும் மின்சாரக் கட்டணங்களையாகுதல் அறவிடாது இலவசமாக மின்சாரவிநியோகம் இவைகளுக்குக் கிடைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும்யாழ்ப்பாண மேயரைக் கோரும் பிரேரணையொன்று யாழ்ப்பாணக் காரியாதிகாரி பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை யாழ்ப்பாணக்காரியாதிகாரிப்பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜக்காரியதரிசி திரு. சூ. அமிர்தநாதர் கொண்டு வந்திருந்தார்.

திரு. அமிர்தநாதர் இது பற்றிப்பேசுகையில் பல நிலையங்கள் நல்லநோக்குக் கொண்டிருந்தபோதும் நிதிநிலைமை காரணமாக பூரண வேகத்துடன் இயங்கமுடியவில்லையென்றும், மாநகரசபையால் தற்போது போதியநிதி உதவி வழங்கமுடியாதிருப்பதால் இவ்விதம் மின்சார விநியோகக் கட்டணம் அறவிடாது நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டால் இதனுல் இந்நிலையங்களுக்கு மிச்சமாகும் பணத்தைக் கொண்டு மேலும் அதனது பணியை சிறப்பாகச் செய்யலாம் என்றும் கூறினுர்.

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜத்தின் காரியதரிசி திரு. த. துரைசிங்கமும் இதனை வலியுறுத்திப் பேசினுர்.

திரு. அ. போல்ராஜ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இந்நிலையங்களின் உபவிழாப் போட்டிகளை அடுத்தமாதம் 2-ம், 3-ம் திகதிகளில் நடத்துவதென கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

---

## உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், செவ்.

தெல்லிப்பளை வித்தியாதரிசியின் பாடசாலைகளுக்கிடையே மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:-

### மேற்பிரிவு

ஆண்கள்: மல்லாகம் ஆங்கிலப்பாடசாலை. பெண்கள்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

### மத்திய பிரிவு

ஆண்கள்: தெல்லிப்பளை யூனியன்கல்லூரி. பெண்கள்: தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி.

### கீழ்ப்பிரிவு

ஆண்கள்: மல்லாகம் ஆங்கிலப்பாடசாலை. பெண்கள்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை வட்டார வித்தியாதரிசி திரு. சண்முகநாதன் கலந்துகொண்டார்.

---

## குருநகர், நாவாந்துறை வீடமைப்புத்திட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

தேசியவீடமைப்புஇலாகா பிரதம சிற்பி திரு. முனசிங்கா குருநகர், நாவாந்துறை ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து வீடமைப்புத்திட்டங்களைஅமைப்பதற்கான காணிகளைபார்வையிட்டுச் சென்றுள்ளார்.

உஷாயர் கிறீக்கோ!! நூற்றுக்குநூறு சுத்தமான
உஷாயர் கிறீக்கோ கோப்பி
ஜோன் கிறீன் கம்பெனியாரால் உத்தரவாதத்துடன் தயாரிக்கப்பட்டது
நிறம் மணம் குணம் நிறைந்தது
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
தினமும் உல்லாசமாய் அருந்துங்கள்
ஜோன் கிறீன் அன் கோ.,
முகத்துவாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விளம்பரம்

யாழ்ப்பாணப் பொலிசுஸ்தானத்தில் சிகை அலங்காரஞ் செய்வதற்கு 'பாபர்' ஒருவர் தேவை. வேதனம்-சேவை நிபந்தனை ஆகியவற்றை யாழ்ப்பாணம் பொலிசுக்கந்தோரில் நேரிற் பெறவேண்டும்.

மனுக்கள் 20-3-66 நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஒப்பம்)
எச். டபிள்யு. எச். வீரசிங்க,
பொலீஸ் சுப்பிரிண்டன்,
யாழ்ப்பாணம்.

2041

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

REGAL—JAFFNA
NOW SHOWING!
Henry Fonda
in
The Best Man

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை காட்களில் 2-30 மணி
சிவாஜி - பண்டரிபாய்
நடித்த
திரும்பிப்பார்

ராஜா
(யாழ்ப்பாணம்)
4-15, 7-00க்கு மட்டும்
டெவில் இன் த பளெஷ்
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)
9-45க்கு மட்டும்
பீஸ் சால் பாட்




# விளையாட்டுப் பகுதி

கிரிக்கெட்

## சென். பற்றிக்ஸ் 151 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ்கல்லூரிக்கும் மனிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 151 ஓட்டங்களால் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றியீட்டியது. சென். பற்றிக்ஸ் கல்லூரியின் சிறந்த பந்தெறிவீரனை கிறவ்தர் 13 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளை வெற்றிகரமாக வீழ்த்தி வெற்றிக்கு மூலகாரணமாக விளங்கினுர் முதலாவது இன்னிங்ஸில் சென். பற்றிக்ஸ் கல்லூரியே முதலில் துடுப்பெடுத்தாடியது. சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 135 ஓட்டங்களை சென். பற்றிக்ஸ் பெற்றது. இதில் எஸ். இராசரத்தினம் 82 ஓட்டங்களையும், எம். குலநாதன் 12 ஓட்டங்களையும், ரி. புவனேந்திரன் 4 ஓட்டங்களையும், ஏ. சி. கிறவ்தர் 7 ஓட்டங்களையும், சந்தியாக்கோ 15 ஓட்டங்களையும், ஏ. சி. பீரிஸ் 7 ஓட்டங்களையும், வி. ஜேசுதாசன் 2 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின்பந்தெறி வீரர்களான பாலசந்திரன் 5 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 44 ஓட்டங்களும், சச்சிதானந்தன் 25 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டும், ஜெகதீசன், 23 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2விக்கட்டுகளையும் வீழ்த்தினுர்கள். இதையடுத்து மானிப்பாய் இந்து துடுப்பெடுத்து ஆடியது. இவர்கள் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 71 ஓட்டங்களையே பெற்றனர். இதில் ஜெகதீசன் 8 ஓட்டங்களையும், நித்தியானந்தீஸ்வரன் 6 ஓட்டங்களையும், ஜெயலோகநாதன் 8 ஓட்டங்களையும், ராஜரூபேந்திரன் 11 ஓட்டங்களும், இராஜேந்திரன் 6 ஓட்டங்களும், இராஜநாயகம் 8 ஓட்டங்களையும் பக்தஜோதி 9 ஓட்டங்களையும், புவனேந்திரன் 2 ஓட்டங்களையும் முறையே பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் சென். பற்றிக்ஸ் பந்தெறி வீரர்களான பெனடிற் 34 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 ஓட்டங்களும், கிறவ்தர் 13 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், ஜெயரத்தினம் 11 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதையடுத்து சென். பற்றிக்ஸ் கல்லூரி தனது 2 வது இன்னிங்ஸை ஆரம்பித்தது. இத்தடவை சென். பற்றிக்ஸ் 9 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து மொத்தம் 173 ஓட்டங்கள் பெற்றுத் தமது ஆட்டத்தை முடித்துக்கொண்டது. இதில் இராசரத்தினம் 18 ஓட்டங்களையும், ஜெயரத்தினம் 16 ஓட்டங்களையும், குலநாதன் 6 ஓட்டங்களையும், புவனேந்திரா விக்கெட்டை இழக்காமல் 34 ஓட்டங்களையும், கிறவ்தர் 25 ஓட்டங்களையும், சந்தியாக்கோ 25 ஓட்டங்களையும், பெனடிற் 22 ஓட்டங்களையும், ஜேசுதாசன் 8 ஓட்டங்களையும், றிச்சேட் 6 ஓட்டங்களையும் முறையே பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின்பந்தெறி வீரர்களான பாலச்சந்திரன் 53ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கெட்டுகளையும், ராஜேந்திரன் 61 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கெட்டுகளையும், சச்சிதானந்தன் 33ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கெட்டுகளையும் முறையே வீழ்த்தினுர்கள். இதையடுத்து மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது2-வது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தது. இவர்கள் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 86 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சந்திரகாந்தன் 15 ஓட்டங்களையும், நித்தியானந்தீஸ்வரன் 8 ஓட்டங்களையும், பாலச்சந்திரன் 8 ஓட்டங்களையும் இராஜரத்தினம் 45 ஓட்டங்களையும், இராஜநாயகம் 5 ஓட்டங்களையும் பெற்றனர். சென். பற்றிக்ஸ் பந்தெறி வீரர்களான ஜெயரத்தினம், 29 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கெட்டுகளையும், புவனேந்திரா 33 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கெட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினர். இப்போட்டி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

---

உடுப்பிட்டி, செவ்.

அடையாறு கலாக்ஷேத்திரத்தில் இசை நடனப் பயிற்சிக்காக இரண்டு மாணவிகளை அனுப்புவதற்கு வாணிகலைக்கழகம் முயற்சிசெய்து வருகிறது. தற்போது இக்கழகத்தில் இசை, நடனத் துறையில் பயின்றுவரும் மாணவிகளே இ ற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்று கழக இயக்குநர் தெரிவித்தார்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஊரந்தனை ஏழாலையில் 71/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மா, பலா, தென்னை முதலியன உட்பட்டகாணி. தேவைக்குகடிதமூலம் எழுதவும் அல்லது நேரில் வரவும். P. நாகமணி, 5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2130

நல்ல நிலையில் உள்ள CL 655 லோட் மாஸ்ரர்லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வி. சிங்காரம், 7/1, அன்னசத்திரம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2129

பூநகரி, செட்டிய குறிச்சியில் ரேட்டோரமாக 50 பரப்பு திறமான நெல்வயல் நல்லதண்ணீர்க்கிணறும்வளவுடன் விற்பனைக்குண்டு. 31-3-66 வரை தொடர்பு கொள்ளவும்.
க. கனகசபை, 21/3, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. 2131

ஆஸ்டின் கேம்பிரிஜ் A 55 ஒருவரே பாவித்த கார் விற்பனைக்குண்டு. டாக்டர் A. செல்வரத்தினம், 5, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. 2132

### வாடகைக்கு

ஊர்காவற்றுறைமேற்கில் சகல வசதிகளுடனும் கூடிய வீடொன்று வாடகைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: "சென்ற் ஜேம்ஸ் வில்லா", மேற்குத்தெரு, ஊர்காவற்றுறை. 2128

### கல்வி

பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜி. சி. ஈ. விஞ்ஞானம் முதல் வருடம் வகுப்புக்கள், விடுதி வசதி உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறைரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 2112

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ வேளாண் மரபின வயது 23. சுமாரான ஆங்கில அறிவும் தையல் வேலைகளில்தேர்ச்சியும் நல்ல பண்பாடுமுள்ள மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. நல்ல வீடும், நகைகளும், ரொக்கம் ரூ. 5000/- மும் சீதனமாகும். நல்ல குடும்பத்திலுள்ளவரும் அரசாங்க எழுதுவினைஞரும் விரும்பத்தக்கது. விளம்பர இல: 2127, ஈழநாடு மே. / பா. என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2127

தொழிலாளர் கிறசருக்குக் கல்லுப்போடவும், டிருக்ரர் பெட்டிக்குச சக்கைக் கல்லு ஏற்றவும் மதவாச்சி ஸ்டேசன் அருகாமையில் தேவை. நேரில் வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையில் விண்ணப்பிக்கவும். —விவேகானந்தன். 2133

பிணைப்பணம் கட்டக்கூடிய காசியர் உடன் தேவை. தகுதியுடையோர் நேரில் வரவும். கொலம்பியா ஸ்ருடியோ, வவுனியா 2134

எஸ். எஸ். சி. அல்லது ஜி. சி. ஈ. தராதரம் உள்ள 20 வயது முதல் 35 வயதுக்குள் உள்பட்ட ஆங்கிலத் தட்டெழுத்து குமாஸ்தாவாக வேலைசெய்வதற்குத் தேவை. ரூபா 1000/- பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருக்கவேண்டும். இருபாலினரும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். விண்ணப்பத்துடன் ரூபா 1/- போஸ்ரல்ஓடர் அனுப்பவும். றஸ்றுடுப்பிளிக்கேற்றர், தெல்லிப்பளை. 2135

வயது 17 முதல் 35 வரை 5 முதல் பட்டதாரிகள் வரை அவரவர் தராதரத்திற்கும் அனுபவத்திற்கும் அரசாங்க இலாகாக்களிலும் பிரத்தியேக ஸ்தாபனத்திற்கும் இடமுண்டு. முழுவிபரங்கட்கும் விண்ணப்பப் பத்திரத்திற்கும் ரூபா 2/- போஸ்ரல் ஓடர் அனுப்புக. றஸ்றுடுப்பிளிக்கேற்றர் தெல்லிப்பழை. 2136


யாழ். உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

## சென். மேரிஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென். மேரீஸ் 'பி' பிரிவுக் கோஷ்டியும், குருநகர் யுனைடெட் 'பி' பிரிவுக் கோஷ்டியும் மோதிக் கொண்டன.

இடைவேளைக்கு முன் நடந்த போட்டியில் சென். மேரிஸ் கோஷ்டியினர் சிறந்த 'பாசிங்' விளையாட்டினுல் அடுத்தடுத்து 2 கோல்களை வெளுத்து வாங்கினர். இக்கோல்களை ஜோசப் வீரசிங்கம், அடைக்கலம் ஆகிய வீரர்கள் அடித்திருந்தார்கள்.

இடைவேளைக்குப் பின் நடந்த போட்டியில் குருநகர் கோஷ்டியில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. இரு கோஷ்டியுமே தலா இவ்விரண்டு கோல்கள் பெற்றன. சென். மேரிஸ் 4 கோல்களும் குருநகர் 2 கோல்களும் பெற்றிருந்த நேரத்தில் தகாத முறையில் போட்டியிட்டதற்காக இரு கோஷ்டியில் இருந்தும் இருவர் மத்தியஸ்தரால் வெளியேற்றப்பட்டனர். இதையடுத்து மீண்டும் ஒருவீரர் வெளியேற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து இரு கோஷ்டியின் ஆதரவாளருக்கிடையே குழப்பம் ஒன்று ஏற்பட்டது. இக்குழப்பத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கைபரிமாறிக் கொள்ளும் அளவுக்கு நிலைமை நீடிக்கவே ஒருசிலர் தலையிட்டு குழப்பத்தைக் கலைத்தனர். இதன் பின் தொடர்ந்து விளையாட்டு நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்தில் சென்மேரிஸ் கோஷ்டியினரின் முன்னணி வீரரான அடைக்கலம் மீண்டும் ஒரு கோலை மின்னல் வேகத்தில் வெழுத்துவாங்கினுர். குருநகர் கோஷ்டியில் கிளைவ், கிறேசியன் ஆகியோரின் விளையாட்டு பாராட்டக்கூடியதாக இருந்தன. சென்மேரிஸ் கோஷ்டியில் கோல்காப்பு வீரர் தம்பித்துரை மற்றும் அடைக்கலம், வீரசிங்கம் ஆகியோரின் விளையாட்டு ரசிக்கக் கூடியதாக இருந்தது. இப்போட்டி முடிவில் சென் மேரிஸ் பி பிரிவு குருநகர் யுனைட்டெட் பி பிரிவை 5-2 கோல்களால் வெற்றியீட்டியது பண்ணை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஏ. சண்முகநாதன் மத்தியஸ்தராக கடமையாற்றினுர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) | மொடேர்ன் (பதுளை) |
| மொடேர்ன் (பண்டாரவளை) | விஜிதா (அட்டன்) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) |



நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன், எஸ். ராமாவ். காஞ்சன
நடித்த
சர்வர் சுந்தரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிரதேசசபைகள் வந்ததும் தமிழ் உபயோகம் அதிகரிக்கும்"

கோண்டாவில், செவ்.

"நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரதேசசபைகள் இயங்கும் முறை அமுலுக்கு வரும்பொழுது தமிழ் மொழி நூற்றுக்கு எழுபது வீதம் உபயோக மொழியாக உபயோகிக்கப்படும். இச்சபைகள் அமைக்கப்படுவதால் தமிழ் மக்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழக்கூடிய ஓர் உயர் நிலை ஏற்படுவதுடன் எம்மையே நாம்ஆளக்கூடிய சூழ்நிலை உருவாகும். இன்று நாம் இழந்த உரிமைகள் பலவற்றில் சிலவற்றைப் பெற்றிருப்பதால் முன்பு இருந்த நிலையில் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டதே தவிரபூரணமான பலனை நாம் அடைந்துவிடவில்லை. நாம் உரிமைகளைப்பெற்றுவிட்டோம். நாம் நினைத்த சலுகைகளை இலகுவில் அரசாங்கத்திடமிருந்து பெற்றுவிடலாம் என்று சிலர் கருதுகிறார்கள். அது தவறு இப்பொழுதுதான் நா விழிப்புடனும் ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டும்.

கோண்டாவில் குமரகோட்டம் வாசிகசாலையில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி கோண்டாவில் கிளையை ஆரம்பித்து வைத்துப்பேசிய நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

எங்கள் நாட்டிலே எங்களுக்கும் சுதந்திரமுண்டு. எங்கள் தேவைகளை நாம் அச்சமின்றிச் செய்யலாம். இந்தநாட்டிலே சிங்கள மக்களும் தமிழ்மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் பொருளாதாரம் பெருகும். சண்டையிட்டு அழிவுறும் அண்டைநாடுகளைப்பார்க்கின்றோம். இதனால் எத்தனை உயிர்சேதம், பொருளாதார பாதிப்பு ஆகியன ஏற்பட்டுள்ளன. இப்படியான சூழ்நிலை நம்நாட்டிலே இனி ஏற்படாமல் இருக்கநாம் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்" என்று டாக்டர் நாகநாதன் மேலும் கூறினார்.

திரு. மு. ஆலாலசுந்தரல் பேசுகையில், "நாம் இழந்துவிட்ட உரிமைகளை பூரணமாகப் பெற முடியாமல் விட்டாலும் குறைந்தபட்சக் கோரிக்கைகளை யாவது பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையின் பேரில் ஓர் ஒப்பந்தம் மூலம் தேசிய அரசாங்கத்தோடு இணைந்தோம். எமது உரிமைகள் பலவற்றை இன்று பெற முடியாவிட்டாலும் என்றோ ஒருநாள் எமது உரிமைகளைப் பெறுவோம் என்ற நம்பிக்கையுண்டு" என்று கூறினார்.

மற்றும் உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம், ந. அருணாசலம், சி. ஆ. த, வடிவேலு, ச. யோகராசா ஆகியோரும் பேசினர்.

தலைவர் டாக்டர் ஈ எம் வி நாகநாதன் தலைமையில் கிளை உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: டாக்டர் ஈ எம் வி நாகநாதன், தலைவர்: அ நவரட்ணம், உப தலைவர்கள்: செ திருநாவுக்கரசு, சி ஞானரத்தினம், காரியதரிசி: ச யோகராசா, உதவிக்காரியதரிசி: ந துரைசிங்கம், தனாதிகாரி: சி சபாபதி, உபதனாதிகாரி: செ பத்மநாதன். மற்றும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக செ விருத்தாசலம், அ தம்பித்துரை, செ நடராசா, நா சுப்பிரமணியம், சி ஆ த வடிவேலு, சி சோதிலிங்கம், த இராசரத்தினம், செ சண்முகநாதன், அ தர்மலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# திருகோணமலை மாவட்ட கி. ச. தலைவர்கள் சமாஜம் அங்குரார்ப்பணம்

திருகோணமலை, செவ்.

திருகோணமலை மாவட்ட கிராமசபைத் தலைவர்கள் சமாஜத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ந. சிவராசா அங்குரார்ப்பணஞ் செய்துவைத்தார்.

மாவட்ட உள்ளூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. ந. சிவராசா பேசுகையில், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ட்டதிட்டங்கள், அதிகாரிகளின் மேற்பார்வை, கணக்குப் பரிசோதகர்களின் கண்காணிப்பு முதலியவற்றிற்கு மேலாக மனச்சாட்சியினதும் மூதாதையர் காட்டிய தர்மவழியிலும் தங்கள் கடமைகளைச் செய்தல் வேண்டுமென்றும் தன் அதிகாரத்தையும் தன்பதவியையும் துஷ்பிரயோகஞ் செய்யும் எவரும் தம்நிலையை இழந்து அடியோடு அற்றுப் போவர் என்பதே நாம் கண்ட உண்மை என்றும் தலைவர்களை வேண்டிக் கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில், உள்ளூராட்சி மன்றத்தின் சேவைகள் அவை சாதிக்கும் வேலைத்திட்டங்களால்மட்டும் மேம்பட்டுவிடாதென்றும் வேலைத்திட்டங்களை அமுல் செய்யப்படும்பொழுது கடைப்பிடிக்கும்வழி 'தர்மவழியா? சட்டதிட்டங்கள் அனுசரிக்கப்பட்டனவா?' என்பதைக் கொண்டுதான் உள்ளூராட்சி இலாகா மதிப்பீடு செய்யுமென்றும் கூறினார்.

மூதூர் முதலாவது எம். பி. ஜனாப் முகமதலி பேசுகையில், பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சிமன்றத் தலைவர்களும் ஒன்றுபட்டு பணியாற்றினால் தான் பிற்போக்கான பிரதேசங்கள் முன்னேற்றமடையமுடியுமென்று கூறினார்.

நகர சபைத்தலைவர் டாக்டர் சிவானந்தன் பேசுகையில், அரசியல் கலப்பின்றி உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சமாஜ நிர்வாகிகள் தெரிவில் தலைவராக தம்பலகமம் கி. ச. தலைவரும், செயலாளராக சேருவில் கி. ச. தலைவரும், பொருளாளராக நிலாவெளி கி. ச. தலைவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தற்காலிகவேலைநீக்கம் பற்றி ஆலோசனை

கொழும்பு, செவ்.

ஜனவரி 8-ம் திகதி இடம் பெற்ற சம்பவங்களின் போது நடந்துகொண்ட முறை சம்பந்தமாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட 9 பொலிஸ் உயர்தர உத்தியோகஸ்தர்கள் பற்றி அரசாங்க சேவைக் கமிஷன் இப்போது ஆராய்ந்து வருவதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கரபந்தாட்டம்

உடுப்பிட்டி, செவ்.

அல்வை இந்து வாலிபர் சங்கத்தினர் புதுவருடப் பிறப்பன்று திரு. சோமசுந்தரம் ஞாபகார்த்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடாத்தவிருக்கிறனர்.

## தாமே தீமூட்டி பெண் தற்கொலை

ஜோர்ஜ்டவுண், மார்ச் 28

பிரிட்டிஷ் கயானாவின் தலைநகரான ஜோர்ஜ்டவுணில் 18 வயதுடைய இந்திய பெண் ஒருவர் தமது உடலில் தாமே மண்ணெண்ணை ஊற்றி தீமூட்டித்தற்கொலை செய்துகொண்டார்.

## 'உணவுப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் உணவு பற்றாக்குறையாகவுள்ள நாடுகளுக்கெல்லாம் அமெரிக்கா உதவுவது சாத்தியமானதல்ல என்றும் மற்ற நாடுகளும் இத் துறையில் உதவ அழைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார். இந்தியா பற்றிக்குறிப்பிட்டுப் பேசுகையில், இந்தியாவுக்கு 8 கோடி டாலர் பெறுமதியான உணவு அமெரிக்கா வைத் தவிர்ந்த நாடுகள் உதவியுள்ளன என்றார்

## அரசாங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்வதன் மூலம் செய்யமுடியுமென்று வற்புறுத்திக் கூறினர்.

### ஜே. ஆர். விளக்கம்

அரசாங்க கட்சி சார்பில் பிரதமபேச்சாளராக இருந்த தற்காலிக பிரதமர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன, தங்களது நகல்பிரேரணையின் அடிப்படை நோக்கங்கள் பற்றி விளக்கிக் கூறியதுடன் இரு சாராரும் கூட்டாகச் சேர்ந்து ஒரு பிரேரணையைக் கொண்டு வருவதின் மூலம் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் நல்லபலனளிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

ஆனால் எதிர்க்கட்சியினர் இதனை ஆட்சேபித்ததுடன் தங்களது பிரேரணையை ஏற்றுக்கொள்வதே சிறந்ததாக இருக்கும் என்றும் கூறி, தங்களது பிரேரணையில் கூறப்பட்டுள்ள ஆறு அம்சங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

### முட்டுக்கட்டை

இக்கோரிக்கையே, முட்டுக்கட்டை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்ததாகத் தெரியவருகிறது.

இந்த முட்டுக்கட்டை தீர்க்கப்படாவிட்டால் ஏற்கெனவே இருந்துவரும் அரசியல் திட்டத்துக்கு அதிக காலம் வரையிலும் திருத்தம் செய்யமுடியாததுடன் மாற்றியும் அமைக்கமுடியாதென்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

கட்சித்தலைவர்கள் கூட்டம் சபாநாயகர்சேர். அல்பேர்ட் பீரிஸ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு உபசபாநாயகர் திரு. ஹியூ பெர்ணாண்டோ... கொரியா, கமிட்டியின் தலைவர் குயின்டன் பெர்ணாண்டோ, சபை முதலவர் திரு. சி. பி. டி. சில்வா, தற்காலிக பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. பிலிப் குணவர்த்தன, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் என். எம். பெரேரா, திரு குணவர்த்தன, டாக்டர் விக்கிரமசிங்க... கெனமன் ஆகியோர் வந்திருந்தனர்.

# டட்லி -- ஜோன்சன் வியாழக்கிழமை சந்திப்பர்

வாஷிங்டன், மார்ச் 8

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனை அடுத்த வியாழக்கிழமை இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இப்பொழுதுள்ள திட்டப்படி திரு. டட்லி இம்மாத இறுதிவரை அமெரிக்காவில் தங்கியிருக்கக் கூடுமென்றும் அடுத்தமாத முற்பகுதியில் தான் நாடு திரும்புவார் என்றுந் தெரியவருகிறது.

சென்றவாரம் வைத்தியப் பரிசோதனைகளுக்குள்ளான பிரதமர் டட்லி நேற்று ஆர்லிங்டன் மயானத்துக்குச் சென்றுகாலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடியின் கல்லறைமீது சிவப்புரோஜா மலர் வளையம் ஒன்றை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இம்மாதம் 21-ந் திகதி உலகவங்கித் தலைவரைப்பிரதமர் சந்திப்பாரென்றும் 24-ந் திகதி வாஷிங்டனிலிருந்து நியுயோர்க் சென்று அங்கு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுடன் நண்பகல் உணவு அருந்துவாரென்றும் இப்போதுள்ள திட்டங்களிலிருந்து அறியப்படுகிறது.

இம்மாதம் 27-ந் திகதி பிரதமர் டட்லி அமெரிக்காவிலிருந்து லண்டனுக்குச் செல்வார்.

## என். எம். க்கு ஜே. ஆர். பதில்

கொழும்பு, செவ்.

இன்று பார்லிமெண்டில் டாக்டர் என். எம். பெரேராவின் கேள்வியொன்றுக்கு தற்காலிக பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பதிலளிக்கையில்; சதித்திட்டம் சம்பந்தமாக நாளைய தினம் (புதன்கிழமை) மந்திரிசபை ஆலோசனை நடத்திய பின்னர் இதுபற்றி அறிக்கை வெகுவிரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறினார்.

சதித்திட்டம் சம்பந்தமாக பார்லிமெண்டில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு டாக்டர் என். எம். பெரேரா கோரியிருந்தார்.

## அவநம்பிக்கைப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடராசா, ரீ. எஸ். துரைராசா, வி. எம். எம். அபுசாலி, கே. வி. தெய்வேந்திரன், என். அன்ரனி.

### எதிர்த்தவர்கள்

நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்த்து வாக்களித்தவர்கள்: திருவாளர்கள் பி. எப். சேவியர், எஸ். மகாதேவா, ஏ. துரைராஜா சிங்கம், எஸ். நாகராசா, என். ரீ. செல்லத்துரை, என். அந்தோனிப்பிள்ளை, ஜே. எஸ். அழகையா.

காதி எம். எம். சுல்தான் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை. நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேறியதென அறிவிக்கப்பட்டதும், பிரேரணையை கொண்டு வந்தவர்கள் பலத்த கரகோஷம் செய்தனர். பாகுபாடின்றி கூட்டத்தை நடத்தியதற்காக கமிஷனரை பாராட்டுவதாக, திரு. ரீ. எஸ். துரைராஜா நன்றி தெரிவித்தார்.

## தற்காலிகசேவை ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்று அரசாங்க இலாகாவோ அல்லது கூட்டுஸ்தாபனமோ கருதும் பட்சத்தில் திறைசேரிக்கு ஒரு மாத காலத்துக்கு முன்னரே அறிவிக்கவேண்டுமென்றும் அப்பொழுது அந்த ஊழியரின் தராதரம் பற்றிய முழு விபரங்களும் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் திறைசேரியின் சுற்றறிக்கை தெரிவிக்கிறது

புதிய சுற்றறிக்கை மூலம் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் சேவையிலிருந்தவர்கள் நிரந்தரமாகும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## ஜி. சி. ஈ. முடிவுகள்

கொழும்பு, செவ்

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகள் மே மாத கடைசிப் பகுதியில் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பர்மாவுக்கு இந்திரா செல்வார்

கல்கத்தா, மார்ச் 8

தாம் விரைவில் பர்மா செல்ல உத்தேசித்திருப்பதாகப் பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி நிருபர்களுக்களித்த பேட்டியொன்றின்போது தெரிவித்தார்,

பர்மிய புரட்சிசபைத் தலைவர் ஜெனரல் நீவினின் அழைப்பை ஏற்றே தாம் அங்கு செல்லவிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜெனரல் நீவின் தற்போது இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ளார் இவர் 6 நாட்கள் இங்கு தங்கியிருப்பார்.

## அவசரகாலநிலை நீடிப்பு

கொழும்பு, செவ்

தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் மசோதா பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டபோது இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அவசரகால சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய அறிவித்தலை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா அரசாங்க வர்த்தமானி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

## மரத்துடன் லொறிமோதியது

எழுதுமட்டுவாள், செவ்.

கல்ஏற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று ஒட்டுவெளி பாலத்துக்கு அருகாமையில் பாதையைவிட்டுவிலகி மரத்தொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது

மிருசுவிலை நோக்கி வந்து கொண்டிருந்த உழவு யந்திரத்துக்கு வழிவிட்டு விலக முயற்சி கையில் இச்சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது. லொறி கிளீனர் இலேசான காயமடைந்தார்.

## மந்திரிக்கு மகஜர்

பரந்தன், செவ்.

முரசுமோட்டை முருகானந்த வித்தியாசாலையை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்துமாறும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களை நியமிக்குமாறும் கோரி, கிளிநொச்சிப் பகுதி வாலிபமுன்னணித் தலைவர் திரு. எம். எஸ் கே. இலட்சுமணன், கல்வி, கலாச்சாரமந்திரி திரு ஐ எம். ஆர், ஏ. இரியகொல்லைக்கு மகஜர் ஒன்று அனுப்பியுள்ளார்.

முரசுமோட்டைப் பகுதிக்கு, மருத்துவ தாதி ஒருவரை நியமிக்குமாறு சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ளஅவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மார்ச்மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org